THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

TENTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

Friday, the 20th January 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER : உங்கள் எல்லோரையும் இந்த சட்ட சபைக் கூட்டத்திற்கு வரவேற்கின்றேன்.

I.—OBITUARY REFERENCE TO DR. U. PADMANABHA MALLAYYA, SRI B. BHIMA RAO AND SRI A. KUPPUSWAMI MUDDALIAR.

MR. SPEAKER : இந்தச் சட்டசபை அல்லது மேல் சபையின் அங்கத்தினர்களாயிருந்த மூன்று பேர்கள் காலமானார்கள் என்ற செய்தியை உங்களுக்கு வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். டாக்டர் யு. பத்மநாப மல்லையா அவர்கள் தென் கன்னடத்தின் பிரதிநிதியாக 1937-ம் ஆண்டிலிருந்து 1952-ம் ஆண்டு வரை இந்தச் சபையில் அங்கத்தினராக இருந்தார். அவர் தென் கன்னட ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும், ஹரிஜன சேவா சங்கத்தின் தலைவராகவும் இருந்து நல்ல பணியாற்றி இருக்கிறார். அவர் சென்ற ஆண்டு, செப்டம்பர் மாதம், 15-ந் தேதியன்று காலமானார்.

ஸ்ரீ பி. பீம ராவ் அவர்களை உங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். அவர் என்னுடைய தகப்பனார் காலத்திலிருந்து கவுன்சில் அங்கத்தினராயிருந்தார். பெல்லாரியின் பிரதிநிதியாக இருந்து மிக நன்றாக வேலை செய்து வந்தார். அவர் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 3-ந் தேதி காலமானார்.

ஸ்ரீ ஏ. குப்புசாமி முதலியார் அவர்கள் சமீபத்தில்தான் நம் சபையின் பிரதிநிதியாக மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்றார். அவர் இவ்வாண்டு ஜனவரி மாதம் 5-ந் தேதி காலமானார்.

இம் மூவரும் காலமானதைக் குறித்து நம்முடைய சபையின் அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையில் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக நின்றார்கள்.]